மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே சட்டமன்றத்திலே கூறியிருக்கிறேன். இன்னும் 8 ஏ. சி. (சினிமாக் காட்சிகள் காட்டப்படும்) பஸ்கள் விடப்பட இருக்கின்றன. அதிலே ஒரு பேருந்து இந்த வழித்தடத்திலே செல்ல இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர்—சென்னை விரைவுப் பேருந்துப்பணி.

* **வினா எண். 72—திரு. கு. வடிவேல்** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு ஒரு விரைவுப் பேருந்து விடும் உத்தேசம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போதிலிருந்து விடப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, கரூரிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு பேருந்துவிடும் உத்தேசம் இல்லை என்று கூறினார்கள். பழனியிலிருந்து சென்னைக்கு குளு குளு பஸ் விடுவதாக சென்ற மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே பத்திரிகையிலே வந்தது. இதுவரையிலே வரவில்லை. என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : குளு குளு ஏ. சி. பஸ்கள் கட்டுவதற்கு குறைந்தது 4 மாதங்கள் தேவைப்படுகிறது. அடுத்த மாதத்திலே வேலை முடிந்துவிடும். அடுத்த மாதத்திலே அந்தப் பேருந்து விடப்படும்.

கோயில் மலையனூர் அணைத் திட்டம்.

வினா எண். 73—திரு. ரா. மார்க்கபந்து, திரு. ப. சந்திரன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அணைக்கட்டுத் தொகுதியில் மேலாசம்பட்டுக்கு அருகில் கோயில் மலையனூர் அணைக் கட்டுத் திட்டம் கட்ட முடிவு செய்யப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆமெனில் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?